**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 61/2024**

**வாதி தரப்பு சாட்சி–1 பழனிச்சாமி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் வாட்சப் பயன்படுத்துவேனா என்றால் பயன்படுத்துவேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கை எத்தனை நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5, 6 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். நான் சமூக ஆர்வலர் என்பதற்கு ஏதாவது அங்கீகாரம் உள்ளதா என்றால் இல்லை, தவறு நடந்தால் தட்டிக் கேட்பேன். நான் மாவத்துார் ஊராட்சி உறுப்பினராக இருந்ததற்கு ஏதாவது சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிராம கல்விக்குழு உறுப்பினராக இருந்ததற்கு ஏதாவது சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எந்த அரசியல் அமைப்பில் கௌரவ பொறுப்பில் இருக்கிறேன் என்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் கரூர் மாவட்ட அவைத்தலைவராக இருக்கிறேன்.

2) நான் அரசியல் கட்சியில் பொறுப்பில் இருந்து கொண்டு சமூக ஆர்வலராக இருப்பதாக சொல்வது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்மீது எனக்கு எதிராக பாலவிடுதி காவல்நிலையத்தில் எத்தனை குற்ற வழக்குகள் இருக்கிறது என்றால் 2, 3 வழக்குகள் இருந்தது. அவை தள்ளுபடி ஆகிவிட்டது. அவ்வாறு தள்ளுபடியான வழக்கில் இழப்பீடு கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்ன காரணத்தினால் இழப்பீடு கேட்கவில்லை என்றால், அப்போது தெரியாததால் போடவில்லை. தற்போது குற்ற வழக்கு ஏதாவது நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் அந்த புகாரை விசாரிக்க காவல் ஆய்வாளருக்கு உரிமை உள்ளதா

என்றால் உள்ளது. காவல் ஆய்வாளரின் முதல் விசாரணையில் தலையீடு செய்ய யாருக்காவது அதிகாரம் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியவில்லை. வருவாய் ஆய்வாளர் என்மீது கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3) மேற்படி வழக்கில் என்னை ஆய்வாளர் கைது செய்தாரா என்றால் செய்தார். கைது செய்யும்போது எனது கைப்பேசியை கைப்பற்றினாரா என்றால் ஆமாம். எனது கைபேசியை நீதிமன்றத்தில் மனு கொடுத்து பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக் கொண்டேன். என்னை கைது செய்த போது எனது உறவினர்களுக்கு கைது பற்றி தெரிவித்து சாட்சிகள் முன்னிலையில் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. பழனிச்சாமி, கனிமொழி ஆகிய சாட்சிகளின் முன்னிலையில் நான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்ற வழக்கின் கோப்புகள் அனைத்திலும் நகல்கள் எனக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்தார்களா என்றால் கொடுத்தனர்.

4) எனக்கு கொடுக்கப்பட்ட நகல்களில் எனது கைபேசியை கைப்பற்றியதற்கான ஆவணம், சாட்சிகளின் விசாரணை, நான் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றின் நகல்கள் இருந்ததா என்றால், நான் படித்து பார்க்கவில்லை, வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். என்னை கைது செய்தது தவறு என்றும், நான் ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்தேன். அவ்வாறு நான் எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிராக புகார் கொடுத்த போது கொரோனா நோய் தொற்றிற்காக ஊரடங்கு அமலில் இருந்த காலம் என்றால் சரிதான். ஊரடங்கு அமலில் இருந்த காலத்தில் நான் வெளியே வரலாமா என்றால் நான் அவ்வாறு வெளியே வரவில்லை. அந்த காலத்தில் எப்படி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன் என்றால், என்னை கைது செய்ததால் அவசரமாக வழக்கறிஞரை சந்தித்து அறிவிப்பு கொடுத்தேன்.

5) நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.10ல் என்னை கைது செய்தது தவறு என காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகமில்லை. நான் விவசாயத்திற்காக உரிய அனுமதி கேட்டு மண் அள்ளும் நபர்களிடம் நான் பணம் கேட்டு மிரட்டியது உண்டா என்றால் இல்லை. எந்த ஆசிரியர் கழகத்தில் தலைவராக இருந்தேன் என்றால், ஊராட்சி தொடக்கப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராக இருந்தேன். வா.சா.ஆ.1 குற்ற அறிக்கையில் கண்டுள்ள 12 சாட்சிகளுக்கு எதிராக ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குற்ற அறிக்கை தாக்கல் செய்த போது அரசு வழக்கறிஞரிடம் அனுமதி பெற்றுத்தான் நீதிமன்றத்தில் காவல்துறையினர் தாக்கல் செய்வார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. அரசு குற்ற வழக்கறிஞருக்கு எதிராக அனுமதி கொடுத்தது தவறு என ஏதாவது அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை.

6) குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் எனக்கு எதிரான குற்றத்தில் இருந்த என்னை விடுவிக்க தாக்கல் செய்த மனுவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரைத்தான் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்த விடுவிப்பு மனுவில் அரசு தரப்பில் பதிலுரை தாக்கல் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக குற்ற வழக்குகளில் சாட்சிகள் முறையாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் எதிரிகளை விடுதலை செய்வது வழக்கம் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் எவ்வித தனிப்பட்ட விரோதமும் இல்லை என்றால் சரிதான். மண் அள்ளக்கூடாது என 1, 2 பிரதிவாதிகளிடம் சொன்னேன், அவர்கள் ஊரில் உள்ள நபர்கள் யாரும் கேட்காத போது நீ மட்டும் ஏன் கேட்கிறாய் என கேட்டார்கள். தற்போதும் அனுமதியின்றி மண் அள்ளிக்கொண்டுதான் இருக்கிறார்கள். நான் புகார் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

7) ஆனால் அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு அதிகாரிகளின் பணியில் தேவையில்லாமல் தலையீடு செய்து அவர்களுக்கு

எதிராக பொய்யான சங்கதிகளை பரப்பி வந்ததால்தான் எனக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மாவத்தூர் ஊராட்சி தலைவருக்கும் எனக்கும் ஏதாவது பிரச்சினையா என்றால் இல்லை. நான் அரசு அதிகாரிகளுக்கு எதிராக தொடர்ந்து பொய்யான சங்கதிகளை பரப்பி அவர்களை மிரட்டி வந்ததால்தான் எனக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு, அது விசாரணை செய்யப்பட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் துறையினர் தங்களிடம் வரும் புகாரை விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்யும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது என்றும், அதில் தலையிட எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். அரசு அதிகாரிகளுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யும் போது அவர்களின் உயர் அதிகாரியிடம் முன் அனுமதி பெறவேண்டும் என்றால் சரியல்ல.

8) நான் அவ்வாறு எந்த அனுமதியும் பெறாமல் அரசு அதிகாரிகளுக்கு எதிராக பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த மன உளைச்சலும் ஏற்படவில்லை என்றும், எனவே 1 முதல் 6 பிரதிவாதிகள் தங்கள் கடமையை செய்ததற்காக எனக்கு எந்த இழப்பீடும் கொடக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் கடந்த 10 ஆண்டுகளாக அரசியலில் பல முறைகேடுகள் செய்தேன் என்றும், அரசியல் பலத்தை பயன்படுத்தி அரசு அதிகாரிகளை மிரட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கை பிரதிவாதிகளுடன் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு எந்தவித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**1, 2 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**